# டி.எப்:.ஏ சி சிடிபி 400mg

**DFA C CDP 400mg**

## பால் பூஸ்டர் - பசு/எருமை மாடுகளுக்கானது

## உலர்ந்த மாட்டுதீவணத்தில் கலந்திட ஏதுவானது

## 400mg ➡ 50மில்லி கால்ஷியம் ➡ 50லிட்டர் பால் பூஸ்டர்


## இதனை ஒரு மாட்டிற்கு 106 நாட்களுக்கு கொடுக்கலாம்



Calcium Powder 400 mg

## பலன்கள்

- மாடுகளின் ஆரோக்கியம் அதிகமாகும்
- பால் சுரப்பது 15% முதல் 20% வரை அதிகரிக்கும்
- பாலின் சுவையும் அடர்த்தியும் அதிகமாகும்
- மாடுகளின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்





**உட்பொருட்கள் :** கால்ஷியம் உலர்ந்த பொடி **400mg**

**குறிப்பு 1.** எமுதலில் எப்படி 400mg கால்ஷியம் பொடியை 50 மில்லி தண்ணீருடன் கலப்பது பற்றிய வீடியோ பார்க்கவும், செய்முறையை படிக்கவும். **2.** எப்படி 6 மில்லி பால் பூஸ்டரை 6 லிட்டர் தண்ணீருடன் கலப்பது பற்றி செய்முறை குறிப்புகளை படிக்கவும். 60 மில்லி பாட்டில் மூடியின் அளவு 6 மில்லியாகும். **3.** எப்படி (600 மில்லி) தயாரித்த பால் பூஸ்டர்+தண்ணீர் கலவையை 250 கிராம் உலர்ந்த தீவணத்துடன் கலந்து மாட்டிற்கு கொடுப்பது பற்றிய செய்முறைகளையும் படிக்கவும். வீடியோக்களையும் பார்க்கவும் : **https://dinlog.in/tamildfaccdp.html**

**குறிப்பு :** 1. இந்த 400mg பொடியை 2 வருடங்களுக்குள் உபயோகிக்கவும். தயாரித்த 50 மில்லி கால்ஷியம் நீரை 3 முதல் 4 மாதங்களில் உபயோகிக்கவும்.
2. இந்த 60 மில்லி பாட்டிலை இருட்டான, குளிர்ந்த இடத்தில் வைக்கவும்
3. எல்லா சமயங்களிலும் எல்லாவிதமான நஷ்டஈடுகளும் அதிகபட்ச சந்தைவிலைக்கு மிகையாகாது.

HSN 2309

**பால் 7 நாளில் 10%, 10 நாளில் 15%, 15 நாளில் 20% அதிகரிக்கும்**

**கிடைக்கும் அளவுகள் / அ.ச.விலை :** 400mg **பொடி மட்டும் ரூ.150/-.**
400mg **பொடி** 60 **மில்லி பாட்டிலில் ரூ.**210/-.

**ரூ 2 மட்டும்**
**1 நாள் 1 பசு**

**தயாரிப்பாளர்கள் : டிலாக் டெக்னாலஜீஸ்,** முதல் மாடி, புதிய எண் 21,
தம்பையா சாலை விரிவு, மேற்கு மாம்பலம், சென்னை 600033. இணையதளம்
www.dinlog.in Emails: dlogtech@gmail.com dlogtech@yahoo.co.in

**செய்முறை :** ஒரு மூடி உள்ள, நன்கு உலர்ந்த, ஒரு 9 / 10 லிட்டர் பக்கெட்டில் 6 லிட்டர் நீரை எடுத்து, அதனுடன் 6 மில்லி (60 மில்லி. பாட்டில் மூடியின் அளவு 6 மில்லியாகும்) ஒரு மூடி அளவு ஊற்றி, கையினால் இருமுறை மட்டும் கலக்க, 6 லிட்டர் பால் பூஸ்டர் கலவை தயார். இதனை எப்பொழுதும் மூடியே வைக்கவும். இதிலிருந்து 600 மில்லி எடுத்து, 250 / 300 கிராம் உலர்ந்த பொட்டு+தவிடுடன், ஒரு பெரிய பாத்திரத்தில் சேர்த்து கலக்கி அப்படியே ஒவ்வொரு மாடாக கொடுக்கவும். சிறிய மாடுகளுக்கு 500 மில்லியும், பெரிய மாடுகளுக்கு 700 மில்லியும் உலர்ந்த பொட்டு+தவிடுடன் கலந்து கொடுக்கலாம். பொதுவாக மாடுகளுக்கு உடல் எடையை பொறுத்து 1 கிலோவிற்கு 2மில்லி வீதம் கொடுக்கலாம். முதல் 15 நாட்களுக்கு தொடர்ந்து கொடுத்துவிட்டு, பிறகு 4 நாட்களில் 3 நாட்களுக்கு கொடுத்தால் போதுமானதே, விரிவான செய்முறை குறிப்புகளை நன்கு படிக்கவும். கொடுக்கபட்டுள்ள வீடியோக்களையும் பார்க்கவும்.

| வினியோகஸ்தர்கள் | டீலர்கள் |
|---|---|
| | |



### டி.எப்:.ஏ சி சிடிபி உபயோகிப்பவர்களுக்கான செய்முறை குறிப்புகள்

400mg **கால்ஷியம் பொடியிலிருந்து** 50 **மில்லி கால்ஷியம் நீர் தயாரிப்பது எப்படி?** : முதலில் இதற்காக கொடுக்கபட்டுள்ள வீடியோவை பார்க்கவும். 60மில்லி பாட்டிலை திறந்து, அதிலிருந்து 400mg காப்ஸூலை எடுத்து பத்திரமாக ஒரு உலர்ந்த கிண்ணத்தில் வைக்கவும். 60 மில்லி பாட்டில் புதியதாக இருந்தால் அதில் 50 மில்லி நல்ல குடிநீரையோ அல்லது விலை கொடுத்து வாங்கிய குடிநீரையோ எடுத்துக் கொள்ளவும். முன்பே உபயோகித்த 60 மில்லி பாட்டிலாயின், அது நன்கு சுத்தமாகவும், நன்கு உலர்ந்தும் இருக்க வேண்டும். அதில் 50 மில்லி நல்ல குடிநீரை எடுத்துக் கொள்ளவும். காப்ஸூல் மேலுள்ள ஹோாலகிராம் ஸ்டிக்கரை பிய்த்துவிடவும். காப்ஸூலை சிலமுறை தரையிலோ / மேஜையிலோ தட்டி, மேலுள்ள கலர் மூடியை திறக்கவும். ஜாக்கிரதையாக காப்ஸூலை பிடித்துக்கொண்டு, அதனுள் உள்ள 400mg கால்ஷியம் பொடியை, முழுவதுமாக, பாட்டிலில் உள்ள 50 மில்லி நீரில் சேர்க்கவும். உடனே பாட்டிலை நன்கு இருக்கமாக முடிவிட்டு, வீடியோவில் பார்த்தபடி, 10 முறை குலுக்கவும். அவ்வளவுதான. 50 மில்லி கால்ஷியம் திரவ பசு பால் பூஸ்டர் தயார். வீடியோவை காண இளையதளம் **https://dinlog.in/tamildfaccdp.html**

6 **லிட்டர் டிஎப்:.ஏ** + **தண்ணீர் கலவை தயாரிப்பது எப்படி?** : ஒரு உலர்ந்த 9 (அ) 10 கொள்ளளவு (மூடிஉள்ள) பிளாஸ்டிக் பக்கெட்டில் சுமார் 6 லிட்டர் (கிணறு (அ) குழாய்) நீரை எடுத்து கொள்ளவும். பிறகு, 50 மில்லி பால் பூஸ்டர் பாட்டிலை ஒரு முறை குலுக்கிவிட்டு, அதிலிருந்து 6 மில்லி (ஒரு மூடி) எடுத்து, 6 லிட்டர் தண்ணீரில் ஊற்றி, உடனே கையினால் இரு முறை மட்டும் கலக்கவும். இப்பொழது 6 லிட்டர் பால் பூஸ்டர் கலவை தயார். இந்த 60 மில்லி பாட்டில் முடியின் அளவு 6 மில்லியாகும். வீடியோ பார்க்கவும் : **https://dinlog.in/tamildfaccdp.html**

**மாடுகளுக்கான பால் பூஸ்டர் தினசரி அளவுகள்** : பொதுவாக மாடுகளின் உடல் எடைக்கு ஏற்ப 1 கிலோ எடைக்கு 2 கிராம் வீதம் கொடுக்கலாம். சிறிய மாடுகள் எடை 250~275 கிலோ இருக்குமாகையால் அவற்றுக்கு 500 மில்லியும், 300~350 எடை கிலோ உள்ள மாடுகளுக்கு 600 மில்லியும், 400~450 கிலோ எடை உள்ள பெரிய மாடுகளுக்கு 700 மில்லியும் பால் பூஸ்டர் கலவையை உலரந்த பொட்டு+தவிடுடன் கலந்து கொடுக்கலாம்.

**ஒவ்வொரு மாட்டிற்கும் பால் பூஸ்டர் கலவை எப்படி கொடுப்பது?** : ஒரு பிளாஸ்டிக் குவளையில் 600 மில்லி அளவினை, கோடு போட்டு வைத்துக் கொள்ளவும். ஒரு வாயகன்ற பாத்திரத்தில் சுமாராக 250 (அ) 300 கிராம் அளவிற்கு உலர்ந்த பொட்டு+தவிடு (இயற்கை தீவணம் மட்டும்) எடுத்துகொண்டு, அதனுடன், 6 லிட்டர் தயாரித்த கலவையிலிருந்து, சுமார் 600 மில்லி, ஒரு பிளாஸ்டிக் குவளையினால் எடுத்து, சேர்த்து, கையினால் 4 (அ) 5 முறை கலக்கி, இந்த ஈரமான பொட்டு+தவிடினை அப்படியே மாட்டிற்கு கொடுக்கவும். மாடு ருசித்து தின்றுவிடும். மீண்டும் இதே பாத்திரத்தில், இதே போல கலந்து ஒவ்வொரு மாட்டிற்கும் கொடுக்கவும். 6 லிட்டர் பால் பூஸ்டர் கலவையை 1 மாட்டிற்கு 10 நாளைக்கோ, அல்லது 10 மாடுகளுக்கு 1 நாளைக்கோ கொடுக்கலாம். முதல் 15 நாட்களுக்கு, தொடர்ந்து இதே போல் மாடுகளக்கு கலந்து கொடுக்கவும். பின்பு 4 நாட்களில் 3 நாட்களுக்கு மட்டும் கொடுக்கவும். 3 நாட்களுக்கு 1 நாள் இடைவெளி விடவும். வீடியோ பார்க்கவும் : **https://dinlog.in/tamildfaccdp.html**

**10 மாடுகளுக்கு டிஎப்ஏ கலவை கொடுப்பது எப்படி?** : ஒரு உலர்ந்த மிகபெரிய வாயகன்ற பாத்திரத்தில் 2.5 (அ) 3 கிலோ தவிடு + பொட்டு எடுத்து கொண்டு, இதனுடன் 6 லிட்டர் தயாரித்த டிஎப்ஏ கலவையை சேர்த்து நன்கு கலக்கி 10 மாடுகளுக்கு சமமாக பிரித்த கொடுக்கலாம்.

**பால் பூஸ்டர் கொடுக்க தகுந்த நேரம் :** பொதுவாக இந்த பால் பூஸ்டர் கலந்த தீவனத்தை பெரிய தீனிக்கு 3 மணி நேரம் முன்போ (அ) பின்போ கொடுக்கலாம். மதியம் 12 மணி முதல் 2 மணிக்குள் கொடுக்கலாம்.

**எப்படி 12 லிட்டர் பால் பூஸ்டர் + தண்ணீர் கலவை தயாரிப்பது?** : 12 லிட்டர் கலவை தயாரிக்க ஒரு உலர்ந்த 16 / 20 லிட்டர் பிளாஸ்டிக் பக்கெட்டில் சுமார் 12 லிட்டர் நீரை எடுத்து, அதனுடன் 12 மில்லி டிஎப்ஃஏ சேர்த்து, 3 முறை மட்டும் கையால் கலக்கவும். இதனை 20 மாடுகளுக்கு கொடுக்கலாம். 12 மில்லி பால் பூஸ்டரை பாட்டிலிலிருந்து எடுக்க அளவு குப்பியை உபயோகிக்கவும். 6 மில்லி எடுக்க பாட்டில் மூடியை உபயோகிக்கவும்.

**6 / 12 லிட்டர் பால் பூஸ்டர் + தண்ணீர் கலவையை எப்படி பாதுகாப்பது?** : மூடியுடைய பக்கெட்டுகளாயின் எப்பொழுதும் பக்கெட்டினை மூடியே வைக்க வேண்டும். மூடி இல்லையெனில், ஒரு அட்டையால் முழுவதுமாக, நன்றாக மூடி வைக்கவும். அளவு குவளையையும் அந்த பக்கெட்டுக்குள்ளேயே வைத்திருக்கவும்.

**குறிப்பு** : இந்த பால் பூஸ்டர் கலவையை ஈரமான மாட்டு தீவனத்துடன் கலந்து கொடுக்க கூடாது. நன்கு உலர்ந்த இயற்கை தீவனத்துனனே கலந்து கொடுக்க வேண்டும். 07 01 25